# DEPOSITION OF WITNESS
## (Chapter XXIII Code of Criminal Procedure)
## IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, FAST TRACK COURT, KARAIKUDI.
## C.C. No. 31/2020 P.W.8

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர்: | : | முருகன் | த–பெ | வெள்ளைச்சாமி |
| ஊர்: | : | சிவகங்கை | சமயம்: | |
| வயது: | : | 50/2025 | வட்டம்: | |
| தொழில்: | : | பைனான்ஸ் கம்பெனியில்வேலை | மாவட்டம் | |

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 07.04.2025**

------------------------------------------------------------------------------------------------------

**07.04.2025**

**முதல் விசாரணை**

1) அதிக காலம் ஆகிவிட்டால் எனக்கு வழக்கு பற்றி நினைவில் இல்லை. ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள இரண்டாவது கையெழுத்து என்னுடையதுதான் அதை நான் எப்போது செய்தேன் என்று நினைவில்லை.

**( அரசு தரப்பில் சாட்சி பிறழ்சாட்சியாக பாவிக்கப்பட்டு அரசு தரப்பில் குறுக்கு விசாரணை)**

**குறுக்கு விசாரணை**

1) கடந்த 21.06.2007 ம் தேதி சிவகங்கை புகைவண்டி நிலையம் அருகே சிவகங்கை நகர காவல் ஆய்வாளர் திரு. சீராளன் மற்றும் போலீஸ் பார்ட்டியுடன் குற்ற கண்காணிப்பில் ஈடுபட்டிருந்தபோது வழக்கின் 1வது எதிரி முருகேசன் 2வது வது பில்தான் என்ற முத்து ஆகியோரை பிடித்து விசாரணை செய்தபோது அவர்கள் தானாக முன்வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை என் முன்பாக பதிவு செய்தார் என்று போலீசார் விசாரணையில் கூறியுள்ளேன் என்றால் சரியல்ல. **ஒப்புதல் வாக்குமூலத்தில்**

**உள்ள வலது புறம் உள்ள கையொப்பம் அ.சா.ஆ.3 ஆகும்.** ஒப்புதல் வாக்குமூலத்தில் அனுமதிக்கப்பட்ட பகுதிகளின் அடிப்படையில் செட்டிநாடு காவல் நிலைய குற்ற எண் 19/2004 இதச பிரிவுகள் 457 மற்றும் 380 வழக்கின் தடைய பொருட்களான தங்க முறுக்கு செயின் – 1 எடை 44.060 கிராம், தங்க பட்டை மாடல் செயின் – 1 எடை 20.270 கிராம் ஆகியவற்றை அத்தாட்சி மகஜரில் கைப்பற்றினார் என்றும், **அத்தாட்சி மகஜரில் உள்ள 1வது கையொப்பம் என்னுடையததான் அது அ.சா.ஆ. 4 ஆகும்** என்று கைபற்றினார்கள் என்று போலீசார் விசாரணையில் கூறிவிட்டு தற்போது உண்மையை மறைத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

( ஒப்பம். செல்வி. செ.ஜெயப்பிரதா , B.Sc., B.L., (Hon's))
விரைவு நீதிபதி காரைக்குடி